WLC15-2-3-TA

# இயேசுவின் வாழ்க்கை, மரணம் உயிர்த்தெழுதலை பற்றிய ஆய்வுகள் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், ஒரு கேள்வியை முன்வைக்கிறோம், இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? இன்றைய புதிய ஏற்ப்பட்டு வல்லுனர்களால் ஏற்றுக்கொள்ளப்படும் நான்கு முக்கியமான வரலாற்று ஆதாரங்கள் என்னென்ன, உண்மையில் இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்று அவர்கள் நம்பும்படி வழிவகுத்திட்ட காரியம் என்ன.

இன்றைக்கு அதை நமக்கு எடுத்துரைக்க இருப்பவர் எமது விருந்தினர் Dr. வில்லியம் லேன் கிரேக், இங்கிலாந்தின் பிர்மிங்கம் பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தில் Ph. D பட்டம் பெற்றவர். இன்றைய ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியின் விசேஷ தொகுப்பில் கலந்துகொள்ள அழைக்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம், நான்தான் ஜான் அன்கெர்பெர்க். நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு நன்றி. இன்றைய எனது விருந்தினரான Dr.

வில்லியம் லேன் கிரேக் நம்முடைய நாட்களின் சிறந்த சித்தாந்த மேதையாக இருக்கிறார். அநேகர் ஒரு டாக்டரேட் பட்டம் வாங்கவே திணறுகிறார்கள். இவர் இரண்டு டாக்டர் படம் பெற்றிருக்கிறார். இன்றைக்கு நாம் பகிர்ந்துகொள்ள இருக்கிற தலைப்பு மிக மிக முக்கியமானது, அதுதான் இயேசுவின் உயிர்த்தெழுதல், அவர் இந்த அளவிற்கு முன்னேறி செல்வதற்கு இந்த தலைப்பு தான் அவரை ஆர்வமுடைய செய்தது, முனிச் ஜெர்மனியில் இந்த தலைப்பிற்கு கீழ் இரண்டாவது டாக்டரேட் பட்டம் பெற்றார். பில், அதை பற்றி சொல்லுங்கள்.

**டாக்டர் வில்லியம் லேன் கிரேக்**:.என்னோட சித்தாந்த டாக்டிரேட் பட்டத்திற்காக காலம் விண்ணியல் விவாதங்களை பற்றி படித்திருக்கிறேன், நாம் ஜெரமனியில் என்னுடைய டாக்டோரல் பட்ட படிப்பை உலகத்திலே சிறந்த முன்னணி ஜெர்மன் இறையியலாளருக்கு கீழ் இருந்து படிக்கச் விரும்பினேன், வால்ப்ஹர்ட்பாநென்பர்க். நான் என்னுடைய டாக்டரல் விவாதங்களில் இயேசுவும் உயிர்த்தெழுதல் பற்றிய வரலாற்று உண்மைகளை எழுதியிருந்தேன். இப்ப, ஒரு கிறிஸ்தவனா, நா ஏற்க்கனவே இயேசுவின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கிறேன்.

ஆனா முக்கியமா, ஜான், என்னுடைய படிப்பு முடியும்போது எனக்கே ஆச்சரியமாக இருந்தது, உண்மையா அந்த பயணம், அந்த உண்மைகள்

என்னை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பற்றி இன்றைக்கு புதிய ஏற்பாட்டு வரலாற்றாளர்கள் சரித்திர நாயகரான இயேசுவை பற்றி கூறியிருக்கிற அனைத்தையும் அலசி ஆராயும்படி கொண்டு சென்றது. எனக்கே அது கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. முந்தைய வல்லுநர்கள் கூறிய தீர்வுகளோடு இவை ஒத்திசைந்து காணப்பட வில்லை, சுவிசேஷ வல்லுநர்களோடு இசைந்திருக்கவில்லை. ஆனா இவை அனைத்தும் இன்றைய புதிய ஏற்ப்பட்டு வல்லுனர்களின் பரந்த கண்ணோட்டத்தின் சாராம்சத்தை வெளிபடுத்துகிறது,இதில் நான் இவாஞ்சலிக்கல் செமினரிகளில் பேசுகிறவர்களின் கருத்துக்களும் உள்ளடங்கும், அதோடு யூத மேதைகளை போன்ற நான் கிறிஸ்டியன் பண்டிதர்களும் இருக்கிறார்கள். எனவே, இயேசுவின் உயிர்த்தெழுதலை பற்றி இப்போது வெளிபடுத்தப்பட்டிருகும் அனைத்து அடிப்படை உண்மைகள் அனைத்தும் இன்றைய பெரும்பாலான புதிய ஏற்ப்பட்டு விமர்சகர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு நிலைபடுத்தப்பட்டிருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி. இந்த தலைப்பை பற்றி ஆராய்ச்சியில் இறங்குகிற எந்த ஒரு நபரும் நிரூபிக்க வேண்டிய நான்கு வரலாற்று ஆதாரங்கள் இருப்பதாக சொல்லுகிறீர்கள், எந்த விதத்திலும் விமர்சனத்தை முன்வைக்கும் முக்கியமான விமர்சகர்கள் இந்த நான்கு உண்மைகளையும் ஏற்றுக்கொண்டதாக சொல்கிறீர்கள். அந்த நான்கு வரலாற்று ஆதாரங்கள் என்னென்ன?

**கிரேக்**:..அவை அனைத்தும் இந்த நான்கு பிரிவுகளின் கீழ் அருமையாக பொருத்தப்படும். முதலாவதாக, நசரேயனாகிய இயேசுவின் அடக்கம் மரியாதைக்குரியதாக இருந்தது, சிலுவை மரணத்திற்கு பிறகு, கல்லறையில், யூத சனகரிப்பை சேர்ந்த அர்மத்தியனான யோசேப்பினால் அடக்கம் பன்னபப்ட்டார். இரண்டாவது உண்மை அவருடைய சிலுவை மரணத்திற்கு பிறகு ஞாயிற்று கிழமை காலையில் கல்லறை காலியாக இருந்ததை அவருடைய பெண் சீடர்கள் கண்டார்கள். மூன்றாவதாக பலதரப்பட்ட ஜனங்களும் குழுக்களும்  பலதரப்பட்ட சூழ்நிலைகளில் வெவ்வேறு பகுதிகளில், இயேசுவின் மரணத்திற்கு பின்னான தரிசனத்தை பெற்றார்கள். இறுதியாக, நான்காவதாக, அவருடைய சீஷர்கள் இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதை விசுவாசிப்பதர்கான சகலவித நிருபனங்களையும் கொண்டவர்களாக உறுதியாக நின்றார்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. முதலாவதாக சொல்லபடுவது, இயேசுவின் கனம் பொருந்திய அடக்கம்.

**கிரேக்**:..இயேசுவின் அடக்கம் ரொம்ப முக்கியமான ஒன்று. ஏன்னா எருசலேமில் உள்ள யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இயேசுவின் கல்லறையை பற்றி சகலமும் தெரியாதிருந்தால், இயேசு உயிர்த்தெழுந்தார்  என்ற விஷயம் எருசலேமில் அவருடைய

கல்லறையில் உண்டான மாற்றம் பிரசித்தி பெரும் அளவிற்கு அதின் நம்பிக்கையை குறித்த புதிய கோணம் ஏற்றுகொள்ள கூடிய ஒன்றாக இல்லாமல் இருந்திருக்கும். எனவே காலியான கல்லறையை பற்றி சொல்லும்போது இயேசுவின் அடக்கம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது.

அநேக மேதைகள் இயேசுவின் அடக்கத்தை பற்றிய தகவல்களை வரலாற்று குறிப்பாக எடுத்துகொள்கிறார்கள். முதலாவதாக, அது தனிப்பட்ட விதமாக தனித்து நிற்கிறது, ஆதிகால ஆவணங்கள். வரலாற்றாளர்கள் இது வரலாற்று பதிப்பு என்பதை உறுதி செய்திட இந்த மாதிரியான முக்கிய திருப்பங்களை பதிவு செய்கிறார்கள். ஒரு நிகழ்வானது ஆதிகால ஆவணங்களோடு தொடர்புடையதாக இருந்தால், அவை கட்டுகதைகளாக இருக்கும் என்கிற சாத்தியம் குறைவாக இருக்கிறது, ஆனா அவை உண்மை என்ற நிலையை குறிக்கிறது. இயேசுவின் அடக்கத்தை பொறுத்தவரை, இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் என்பதற்கு பலதரப்பட்ட ஆதாரங்கள் இருக்கிறது.

முதலாவதாக பிரீ மார்கனின் பேஷன் கதை, அதாவது அது, இயேசுவின் இறுதி வாரத்தின் சம்பவங்களை மாற்கு சுவிசேஷத்தில் இருந்து எடுத்து தொகுத்து வழங்கியிருக்கிறார்கள். புதிய ஏற்ப்பாட்டில் இது மிக மிக பழமையான ஒரு ஆவணமாகும், இது இயேசுவின் மரணத்திற்கு பிறகு அதை கண்ணாரக்கண்ட சாட்சிகளால் பத்து

வருடங்களுக்கு பிறகு எழுதப்பட்டது. இரண்டாவது ஆதிகால ஆவணம் என்னவென்றால் பவுல் கொரிந்து சபைக்கு முதன் முதலாக எழுதி அனுப்பிய கடிதம் முதல் நிருபம், கீரீசில் இருந்து. அங்கு பவுல் இந்த காரியங்களை வாய்மொழியாக கூறுகிறார் முதலில் இவற்றை அவர் பெற்றுக்கொண்டு பின்பு கொரிந்தியர்களுக்கு தெரிவிக்கிறார். அது என்னவென்று கேட்டால், “வேதவாக்கியங்களின் படி கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படியே அவர் மூன்றாம் நாள் உயிரோடு எழும்பினார். கேபாவிற்கு தரிசனமானார், பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார்.”இந்த வாக்கியத்தின் இரண்டாவது பகுதி இயேசுவின் அடக்கத்தை குறிக்கிறது.

இந்த காரியம், பவுலின் மூலம் சொல்லப்படுகிறது, அது இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பிறகு ஐந்து வருடங்கள் கழித்து நடக்கிறது. அதினால் புதிய ஏற்ப்பாட்டிருக்கு வெளியில் இரண்டு ஆதிகால ஆவணங்கள் மூலம் இயேசுவின் அடக்கம் உறுதி செய்யப்பட்டிருக்க காண்கிறோம், இன்னும் பலதரப்பட்ட ஆவணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.பிரீ மார்கன் பேஷன் கதையில் சொல்லப்பட்டது போல இயேசு கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார் என்பதை நம்புவதற்கு சிறந்த திடமான ஆதாரங்கள் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. இப்ப ஒரு நிமிஷம் இருங்க சுவிசேஷங்களை எழுதியவர்கள் பயன்படுத்திய உபகரணங்களை பற்றி அறிந்துகொள்ள நமது நேயர்கள் மிகுந்த ஆவலோடு இருக்கிறார்கள் அதை பற்றி சொல்லுங்க. ஆனா லூக்கா அதை பற்றி தனது அறிமுக பக்கத்தில் கூறுகிறார். இதை எழுதுவதற்கு முன்பு சகலத்தையும் அவர் ஆராயந்தரிகிறார். எல்லா விபரங்களையும் சேகரித்துகொண்டார், ஒரு சிறுவன் விடைத்தாளை தயாரிப்பது போல, எதையெல்லாம் ஏற்றுகொள்ள முடியுமோ அவை அனைத்தையும் அவர் சேகரித்து வைத்தார். லூக்காவின் காரியத்தில் இது கண்ணாரக்கண்ட சாட்சிகள். மாற்கும் இதுவும் ஒன்றாக இருக்கும். மேதைகள் கூட இது இரண்டும் தொடர்ச்சியாக நாடாகும் நிகழ்வுகளின் பதிவுகளை கொண்டிருப்பதாக கூறுகின்றனர். மாற்கு ஆதினாட்களின் ஆவணங்களை பயன்படுத்தினார், மேதைகளும் இதைதான் கூறுகிறார்கள். இதை பற்றிதான் நாம் பேசிக்கொண்டிறோம்.

**கிரேக்**:..அது சரிதான், நிச்சயமான உண்மை. இப்ப, சாத்தியமானவை என்ற அடிபடையில் இயேசுவின் அடக்கத்தை பற்றிய சம்பவம் தத்ரூபமானது என்று சொல்வதற்கான இரண்டாவது காரணம். இங்கு என்ன சொல்லப்படுகிறது என்றால் ஆதி கிறிஸ்தவ திருசபையினருக்கு ஏதாவது ஒரு விஷயம் நிகழ்வு வியர்த்தமானதாக இருந்தால், அதை வரலாற்று குறிப்புகளில் சேர்த்துகொள்வார்களாம். அதன்

அடிப்படையில் அர்மத்தியனாகிய யோசேப்பு அடக்கம் பண்ணினதும் வருகிறது. இயேசு தமது குடும்பத்தினராலோ அல்லது தமது சீஷர்களாலோ அடக்கம் பண்ணப்படவில்லை. மாறாகா அவர்கள் எல்லாரும் அவருக்கு விலகி இருந்தார்கள். மாறாக வெறுப்பை காண்பித்த சனகறிப் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவன் யூத சங்கத்தில் இருப்பவன், அவனை பற்றி, மாற்கு கூறுகிறான், இயேசுவை சிலுவையில் அறையும்படி சொன்னது அவர்கள்தான். அதனால சரித்திரமாக இருக்கிற காரியம் அறிமத்தியனாகிய யோசேப்பினால் அடக்கம் பண்ணப்பட்டது. இந்த காரியத்தில் ஆதிகால கிறிஸ்தவர்கள் சனகறிப் சங்கத்தில் இருக்கும் ஒருவன் இயேசுவின் சரீரத்தை சிறந்த முறையில் தனது கல்லறையில் அடக்கம் செய்தான் என்று கட்டுக்கதை சொல்லியிருக்க முடியாது இதுல,

**ஆன்கர்பெர்க்:** அதுல என்னாச்சு

**கிரேக்**:..... சாத்தியமில்லை. இது ஆச்சரியமா இருக்கும். நசரேயனாகிய இயேசுவின் மரணத்திற்கு காரணமாக இருந்தவர்களின் யார் யார் என்று நமக்கு துல்லியமாக தெரியும். இது வியப்பாக இருக்கிறது.

ஜான் A. T. ராபின்சன், புதிய ஏற்ப்பாட்டு பாடங்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தின் பேராசிரியர், இவர் இவாஞ்சலிக்கல் மற்றும் உறுதியான என்ற தளங்களுக்கு அப்பாற்பட்ட ஒருவராக இருக்கிறார், இவர் இயேசு கல்லறையில் அடக்கம் பன்னபப்ட்டார் என்ற ஆதிகால

ஆவணங்களின் நிருபணங்கள் இயேசுவை மாற்றிய உண்மைகளில் மறுக்க முடியாத சிறப்பான ஒன்று என்று கூறியிருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** சரி, ஆல்ரைட், அநேக விமர்சகர்கள் ஒப்புக்கொள்ளும் இரண்டாவது ஆதாரத்தின் உண்மையை பற்றி பார்க்கலாம், அது இதுதான்: சிலுவையில் அரைப்படுதலுக்கு பிற்பாடு வருகிற ஞாயிற்று கிழமை, அவருடைய சீடர்களுள் உள்ள பெண்கள் இயேசு வைக்கப்பட்ட கல்லறை காலியாக இருப்பதை கண்டார்கள். ஏன் விமர்சக மேதைகள் கல்லறை காலியாக இருக்கும் சம்பவத்தை ஒரு உண்மையின் வரலாற்று ஆதாரமாக எடுத்து கொள்கிறார்கள்.

**கிரேக்**:..சரி, மறுபடியும், இந்த காலியான கல்லறை என்ற விஷயமும் ஆதிகால ஆவணங்களில் தனித்து இணைக்கப்பட்ட ஆவணம். இயேசுவின் கல்லறை காலியாக இருந்தது என்பதை உறுதிபடுத்தும் ஆறுவிதமான கூற்றுகள் தனித்தனியே  உறுதி அளிப்பதை பார்க்க முடியும். இவைகளில் ஒன்று மறுபடியும் பிரீ மார்கனின் பேஷன் கதை. பேஷன் கதையானது அடக்கத்தோடு நின்றுவிடவில்லை. பேஷனின் காலியான கல்லறையின் பங்கும் இருக்கிறது. அது மொழியினம் மற்றும் இலக்கண பூர்வமாக அடக்கத்தோடு இணைந்த ஒன்றாக கருதப்படுகிறது. அதை அருமையாக சித்தரித்திருந்தார்கள். மேலும் காலியான கல்லறையை கண்டறிவதோடு அந்த கதைக்கு முற்றுபுள்ளி வைக்கப்படவும் இல்லை.

அதேபோல, பவுல் கொரிந்திய சபைகளுக்கு எழுதிய தமது நிருபங்களில் கடிதங்களில் குறிப்பிட்டிருக்கிறார், அவரது மூன்றாவது வரியில் அவர் சொல்கிறார்: "வேத வாக்கியங்களின் படியே அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்." இப்ப,இரண்டு காரியங்கள் காலியான கல்லறைக்கு பின்னால் இருக்கும் உண்மையை எடுத்து கூறுகிறது. முதலாவது, சுவிசேஷங்கள் கூறுகிற அந்த கடைசி சில வரிகளை ஒப்பிட்டு பார்க்க வேண்டியது ஒருபக்கம், அப்போஸ்தலர்களின் நிருபங்களில் சொல்லப்பட்டவை மற்றொரு பக்கம், இதில் உங்களுக்கு தெரியவரும் காரியம் என்னன்னா முதல் வரி இயேசுவின் மரணத்தை குறிக்கிறது; இரண்டாவது வரி, அவர் அடக்கம் பண்ணப்பட்டார், இது அவரது அடக்கத்தை பற்றி சொல்கிறது; மூன்றாவது வரி, "அவர் மூன்றாம் நாளில் உயிர்ப்பிக்கப்பட்டார், இது காலியான கல்லறையை பற்றி கூறுகிறது, அதோடு, அவர் கேபாவிற்கு தரிசனமானார், பின்பு பன்னிருவருக்கும் தோன்றினார்." இது அவர் தரிசனமாகி காட்சியளித்தார் என்பதற்கு தொடர்புடையதாக இருக்கிறது. யகுளந்வள பவுல் இங்க செய்தியின் சுருக்கத்தை கொடுத்திருக்கிறார், உங்களுக்கு வேணுன்னா, பார்த்துக்கலாம் ஆனா அதில மூன்றாவர்த்து வரி அவருடைய காலியான கல்லறையை குறிக்கிறது.

இந்த பகுதியின் மற்றொரு குறிப்பு என்னவாக இருக்கிறதென்றால், "மூன்றாம் நாளில்" இந்த விதத்தை எதற்காக அவர்கள்

பயன்படுத்தினார்கள்? சரி, சுருக்கமா சொல்ல விரும்புகிறேன், இது சாத்தியமான ஒன்றாயிருந்தது ஏன்னா மூன்றாம் நாளில்தான். யூதர்களுடைய கலாசாரத்தின்படி, பெண்கள் கல்லறை காலியாக இருப்பதை கண்டறிந்தார்கள். ஆகவே இயற்கையாகவே உயிர்த்தெழுதல் மூன்றாம் நாளை குறிப்பதாக இருக்கிறது. என்பே பவுலின் தகவல்களில் கூட காலியான கல்லறைக்குரிய ஆதிகால ஆதாரம் காணப்படுகிறது. லூக்கா மத்தேயு தவிர இதர தனித்துவமான ஆதாரங்களும் நம்மிடம் இருக்கிறது, அப்போஸ்தலர்களின் நடபடிகளில் உள்ள பிரசங்கங்கள், தனித்துவமான ஆதிகால ஆவணங்களில் காலியான கல்லறை பற்றி போதுமான பல தகவல்கள் இருக்கிறது. ஒரு நிகழ்வை பற்றி இரண்டு தனிப்பட்ட ஆதிகால ஆவணங்கள் இருந்தால் வரலாற்றாளர்கள் இது வரலாற்று பிழை என்று கருதிக்கொள்கிறார்கள். ஆனால் காலியான கல்லறை என்ற காரியத்தில் ஆறுக்கும் மேற்பட்ட தனித்துவமிக்க ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப பெண்களை பற்றி பார்க்கலாம். பெண்கள் கல்லறை காலியாக இருப்பதை கண்டார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது ஏன். ஏன் வரலாற்று விமர்சகர்கள் கல்லறை காலியாக இருக்கிறது என்ற இந்த உண்மை ஏற்றுகொள்ள கூடியது என்று எடுத்துகொள்கிறார்கள்?

கிரேக்:..இது சாத்டியகூரற்ற நிலை என்ற தன்மையை குலைப்பதாக இருப்பதற்கு சிறந்த உதாரணம், நினைவிருக்கிறதா, சாத்தியகூரற்ற நிலை என்பதை முன்மொழிபவர்கள் சொல்வது நினைவிருக்கிறதா, அதாவது ஒரு நிகழ்வானது கிறிஸ்தவ அமைப்பின்படி வியர்த்தமானதாக சாத்தியமற்றதாக காணப்பட்டால், அது அவர்களால் உண்டாக்கப்பட்ட கட்டுகதையாக இருக்கலாம் என்கின்றனர். பெண்களால் கல்லறை காலியாக இருப்பதாக கண்டறியப்பட்ட உண்மை அப்படிதான் இருக்கிறது. முதல் நூற்றாண்டும் யூத கலாசாரத்தில், பெண்களுடைய சாட்சிகளை அவர்கள் ஒருபோதும் நம்பமாட்டார்கள் நம்புவதற்கு பாத்திரமற்றதாக நினைப்பார்கள். யூத வரலாற்றாளரான ஜோசேபஸ்  கூறியிருக்கிறார் பெண்களுடைய பாலினம் மற்றும் லேவியரின் கலாசாரம் இருப்பதால் பெண்கள் நியாயாசனத்திற்கு முன்பாக வருவதற்கு கூட அனுமதிக்க படமாட்டார்கள் அவர்கள் சாட்சிகள் செல்லாது என்கிறார். ஆகவே பெண்களின் சாட்சிகள்  ஏற்றுகொள்ள கூடியவை அல்ல.

இரண்டாவதாக, எப்படி சீஷர்கள் இயேசுவை துளைத்துவிட்டார்கள் என்பதையும் கூறுகிறது. இதில் அதிகாரப்பூர்வமான சாட்சிகள் வேண்டுமானால் பேதுருவும் யோவானும் கூடத்தான் காலியான கல்லறையை கண்டார்கள், ஒருவேளை பெண்களின் சாட்சிகள் செல்லாவிட்டால் இதை எடுத்துகொள்ளுங்கள். எனவே பெண்கள் கல்லறை காலியாக இருப்பதை கண்டார்கள் அலல்து பெண்கள்

காலியான கல்லறையை பற்றி கூறினார்கள் என்ற காரியங்கள் ஏற்றுகொள்ளப்படாவிட்டாலும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கல்லறை காலியாக இருப்பது கண்டறியப்பட்டது உண்மையான சம்பவம் தான்,. சுவிசேஷங்களில் இவை பதிவு செய்யப்பட்டுள்ளது, அவர்களுக்கு இது வியர்த்தமாகவும் சாத்தியமற்ற உண்மையாகவும் இல்லை.

**ஆன்கர்பெர்க்:** காலியான கல்லறையை பற்றிய விஷயத்தில் இன்னொரு சாதகமான நிலை இருப்பதாக கூறுகிறீர்கள் அதாவது ஆதி சீஷர்களின் எதிரிகள் இந்த காலியான கல்லறையை எதிர்பார்த்திருக்கலாம். அப்ப நீங்க என்ன சொல்ல வருகிறீர்கள்?

**கிரேக்**:..இயேசுவின் உயிர்த்தெழுதலை குறித்த அவரது சீஷர்களின் அறிக்கைகளுக்கு ஆதிகால யூதர்கள் மத்தேயு சுவிசேஷம் இருபத்தி எட்டாம் அதிகாரத்தில் கூறியுள்ள காரியங்களை குறித்து பேசிட விரும்புகிறேன். சீஷர்களின் அறிக்கைக்கு மாறுத்தரமாக இந்த யூதர்கள் என்ன சொல்லுகிறார்கள், "அவர் மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? அவங்க என்ன கேட்க்கிறாங்க, அவருடையசரீரம் இன்னும் தோட்டத்தில் உள்ள கல்லறையில் இருக்கிறதா? அல்லது, இவர்கள் மதுபானத்தினால் பிதற்றுகிறார்களா என்றனர்." இல்லை, அவங்க என்ன சொன்னாங்கன்னா, "சீஷர்கள் தான் இராத்திரியில் வந்து அவருடைய சரீரத்தை திருடி சென்றனர்." சரி, இதை பற்றி கொஞ்சம்

யோசித்து பாருங்கள். சீஷர்கள் ராத்திரி வந்து அவருடைய சரீரத்தை திருடி சென்றனர். ஆதிகால யூதர்கள் உயித்தெழுதலுக்கு விரோதமாக சொன்ன கட்டுக்கதை இது அவருடைய சரீரம் அங்கே இல்லை என்பதை உறுதி செய்கிறது. ஆகவே யூத அதிகாரிகள் காலியான கல்லறையை விளக்கி சொல்ல முயற்சித்து இந்த மாதிரியான கட்டுகதையை சொல்லி தங்களை தாங்களே சமாதானப்படுத்தி கொள்கிறார்கள். காலியான கல்லறைக்கு உரிய வரலாற்று ஆதாரமானது உண்மையில் உயர்ந்து நிற்கிறது, ஏன்னா அது ஆதிகால கிறிஸ்தவ அமைப்பினறினால் தோன்றவில்லை, ஆனா கிறிஸ்தவர்களின் எதிரிகளாக இருந்தவர்கள் அங்கு சரீரம் இல்லை என்பதை தங்களுடைய சாட்சிகளினாலே பதிவு செய்து வைத்திருக்கின்றனர்.

**ஆன்கர்பெர்க்:** அருமையான ஒன்று. அடுத்து மூன்றாவது காரியத்தை பார்க்கலாம். அதிகப்படியான விமர்சகர்களால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாவது வரலாற்று ஆதாரம் என்னவென்றால் பலவிதமான சூழ்நிலைகளில் பலதரப்பட்ட ஜனங்கள் ஜனக்கூட்டம் தனிநபராக கூட்டமாக உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்த அனுபவம் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உண்மையை விமர்சகர்கள் ஒப்புகொண்டிருப்பது அருமையான விஷயம் தான்.

கிரேக்:..இந்த உண்மைதான்,. ஜான், இதை தான் வரலாற்றாளர்கள் நூறு சதவிகிதம் எடுத்துகொள்கிறார்கள். உயிர்த்தெழுந்த இயேசுவின் தரிசனத்தை கண்டார்கள் என்ற உண்மையை மறுக்க முடியாத ஒரு சத்திய கூற்றாக இது அமைந்திருக்கிறது. இதற்கான காரணங்களில் ஒன்று பவுல் கிரீசில்கொரிந்தியர்களுக்கான முதல் நிருபத்தை எழுதும்போது பல சாட்சிகளை அவர் முன்வைத்து எழுதியிருப்பது தான். அதனுடைய இறுதி வரியில் சொல்லியிருக்கிறார், “அவர் கேபாவிற்கு தரிசனமானார், அது பேதுருவிற்கான அராமிய வார்த்தை, பிரதாக சீஷன், அவர் பேதுருவுக்கு தரிசனமானார். அடுத்து பன்னிருவருக்கும், அதாவது பனிரண்டு சீஷர்களை குறிக்கிறது. அதோடு பவுல் சேர்த்து கூறுகிறார், சொந்த வார்த்தைகளில், இன்னொரு சாட்சியும் சேர்ந்துகொள்கிறது என்பதை அறிந்த கூறுகிறார். அவர் சொல்கிறார், “அதற்கு பிறகு ஒரே சமயத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட சகோதரர்களுக்கு காட்சியளித்தார், அவர்களில் பலர் இன்னும் நம்மத்தியில் இருக்கிறார்கள், சிலர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். பிறகு அவர் யாக்கோபிற்கு தரிசனமானார், “இது இயேசுவினுடைய இளைய சகோதரனாக இருக்கலாம், எருசலேமின் சபையின் தலைவராக இருந்தார். அடுத்து பவுல் கூறுகிறார், இறுதியாக, அப்போஸ்தலர்கள் எல்லாருக்கும் தரிசனமானார். கடைசியாக, என்னை போன்ற அகால பிறவிக்கும், பவுல தன்னை சொல்கிறார், “ எனக்கும் அவர் தரிசனமானார். “

இந்த தகவல்களின் கால வரிசையை வைத்து பார்க்கும்போதும், பவுல் பேதுருவோடும் யாக்கோபோடும் கொண்டிருந்த தனிப்பட்ட ஐக்கியத்தையும் பார்க்கும்போது, புதிய ஏற்ப்பட்டு வல்லுநர்கள் யாவரும் ஒப்புகொல்லுகிற ஒரு காரியம் என்னவென்றால் இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்த பிறகு தனிநபராக குழுவாக பலரும் அவரை தரிசித்தது உண்மை என்கின்றனர். சரி, நீங்க விரும்பினால் இது பிரம்மை அல்ல என்ற கண்ணோட்டத்தை விளக்கி கூறிடலாம், ஆனா இவை சம்பவிக்கவே இல்லை என்று உங்களால் மறுத்து சொல்லவே முடியாது.

**ஆன்கர்பெர்க்:** C. H. டாட் இவரும் இந்த உண்மையை குறிப்பிட்டிருக்கிறார். அதை பற்றி சொல்லுங்கள்.

கிரேக்:..சரி, பவுல் சொல்லியிருக்கும் காரியம் மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது அவர் ஐநூறு சகோதரர்களுக்கு தரிசனமானார் என்று சொல்வதோடு கூட, இன்னொரு முக்கியமான காரியத்தையும் சேர்த்து சொல்லியிருக்கிறார், :அவர்களில் பலர் இன்னும் நம்மத்தியில் இருக்கிறார்கள், சிலர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்,.” அப்ப, எதற்காக இதை சேர்த்து சொன்னார்?சரி, ஆதிகால வரலாற்று பதிவுகள் எழுதப்படும் வழக்கத்தின் படி அந்த நிகழ்வை கண்ணாரக்கண்ட சாட்சிகள் இருந்தால் அவர்களும் பேச வாய்ப்பளிக்கப்படும் விதத்தில் அவர்களையும் சேர்த்துக்கொள்வார்கள். அதனால பவுல் தைரியாமாக

சொல்லுகிறார், வேண்டுமானால் சாட்சிகளை கேள்வி கேட்டுகொள்ளுங்கள். இந்த சாட்சிகள் இன்னும் இருக்கிறார்கள் என்று பவுல் அறிந்திருந்தார். அவருடைய பாகத்தில் வெறும் கண்துடைப்பு காரியமல்ல என்பதை புரியும் ஏன்னா அவர்களில் சிலர் மரித்துவிட்டார்கள் என்பதும் அவருக்கு தெரியும்., அதையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆனா மீதம் இருக்கிறவர்களிடம் என்ன பார்த்தார்கள் என்று கட்டு அறிந்துகொள்ள விரும்பினால் அவர்கள் அதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதை அவர் முன்வைக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** பில், இயேசுவின் இளைய சகோதரனை பத்தி சொல்லுங்க, யாக்கோபு. இந்த பட்டியலில் அவரும் இடம்பெறுகிற அளவிற்கு அவர் விமர்சகர்களுக்கு முக்கியமாக தோன்றுவதற்கு காரணம் என்ன?

**கிரேக்**:..இது மறுக்க முடியாத ஒரு விஷயம், ஜான், அவர் தரிசனமளித்தவர்களின் பட்டியலில் யாக்கோபும் இருக்கிறார், இயேசுவின் இளைய சகோதரன். இது மறுக்கு முடியாத ஒன்று ஏன்னா யாக்கோபும் இயேசுவின் எந்த சகோதர்களுக்கு அவர் உயிரோடு இருந்த போது அவரை விசுவாசித்ததே கிடையாது. அவரை அவர்கள் மேசியாவாக கருதவில்லை; அவரை அவர்கள் தீர்க்கதரிசியாக நினைக்கவில்லை. அவர் விசேஷமானவர் என்ற எண்ணம் கூட அவர்களுக்கு வந்தது கிடையாது. அதுமட்டுமல்ல, இயேசு பயித்திய

காரத்தனமாக செய்வதாக அவர்கள் கருதி கொண்டார்கள் என்ற சம்பவங்கள் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களை பார்க்கிறோம்.

இருந்தாலும், அப்போஸ்தலர்கள் புத்தகத்தில், திடீரென்று இயேசுவின் குடும்பத்தார் கிறிஸ்தவர்களோடு ஒருவராக மேல்வீட்டு அறையில் கூடியிருந்தார்கள். அதினால் யாக்கோபு புதிய ஏற்ப்பாட்டு சபைகளின் தலைவராக மாறினால் என்பது உண்மை. அவர் எருசலேமின் திருச்சபைகளின் முக்கியமான தலைவராக பொறுப்பெடுத்தார். புதிய ஏற்பாட்டில் யாக்கோபை பற்றி சொல்லப்பட்ட காரியங்கள் இவ்வளவுதான். ஆனா ஜோசேபஸ் மூலம், யூத வரலாற்றாளர், யாக்கோபை பற்றி அறிகிறோம், இயேசுவின் இளைய சகோதரன், அவருடைய விசுவாசத்தின் நிமித்தம் கிபி 60ல் இரத்த சாட்சியாக மரித்தார், அரசாங்கத்தில் ஏற்பட்ட சூழ்ச்சிகளினால் சனகரிப் சங்கத்தினறார் சட்டத்திற்கு விரோதமாக கல்லெறிந்து கொல்லப்பட்டார்.

சரி, இதை யோசித்து பாருங்க. தன்னுடைய மூத்த சகோதரனை பற்றி நம்பிக்கை இல்லாத அவிசுவாசியாயிருந்த யாக்கோபை இப்படி மாற்றியது என்னது, இப்போது  இயேசுவை மேசியாவாக கருதியதால் மரிக்கவும் தயங்காமல் நின்றது எப்படி? இயேசு சிலுவையில் மறித்தது தன்னுடைய மூத்த சகோதரன் தெய்வப்பிறவி என்று யாக்கோபின் மனதில் தோன்றினதோடு நின்றுவிடவில்லை. யாக்கொபுக்குள் இந்த

மாற்றம் வருவதற்கு காரணம் பவுல் சொன்னது கிடையாது என்று சந்தேகிக்க முடியுமா, "அவர் பின்பு யாக்கோபுக்கு தரிசனமானார் என்றிருக்கிறதே? "

சரி, நம்மில் பலருக்கு சகோதரர்கள் இருக்காங்க. உங்க சகோதரன் தேவன் என்று நீங்க நம்புவதற்கும் அந்த நம்பிக்கைக்காக நீங்க மரிக்கவும் தயாராக இருக்கவும் உங்களுக்கு என்ன தேவைப்படும்? யாக்கோபுக்குள் இந்த நிலைமாற்றம் உண்டாவதற்கு மரணத்தில் இருந்த உயிர்த்த இயேசு அவருக்கும் தரிசனமானார் என்ற ஒரு உண்மை மட்டும் மோதும் என்பதில் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா?

**ஆன்கர்பெர்க்:** நசரேயனாகிய இயே சுவின் விதி என்பதை விளக்கி சொல்ல முயலுகிற எந்த ஒரு விமர்சக வரலாற்று ஆதாரமாக இருந்தாலும் அதில் நான்காவதாக நிற்கிற வரலாற்று உண்மை இதுதான்: ந சரேயனாகிய இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் என்ற சீஷர்களின் விசுவாசத்தின் துவக்கம்.இதற்கு என்ன அர்த்தம்?

**கிரேக்:**..இது ஒரு மறுக்க முடியாத வரலாற்று ஆதாரம், இதை புதிய ஏற்பாட்டு வரலாற்றாளர்கள் ஒப்புகொள்ளுகிறார்கள், அதாவது ஆதியில் இயேசுவை பின்பற்றியவர்கள் திடீரென்று இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தார் என்பதை விசுவாசிக்க துவங்கினார்கள். ஸ்ரீ, இந்த அசாதாரணமான நம்பிக்கையின் ஆதாரம் என்னவென்று எப்படி

விளக்கிடுவீர்கள்? இந்த நம்பிக்கை யூதத்தன்மை அல்ல. யூதர்களுடைய எண்ணப்படி, மேசியா சங்கரிக்கப்பட முடியாது, அவர் எருசலேமில் தாவீதின் சிங்காசனத்தை நிலைபடுத்த வேண்டும். ஆதிகால சீஷர்களுக்கு இயேசுவின் சிலுவை மரணம் ஒரு தத்தளிப்பை உண்டாக்கியது. இயேசுதான் மேசியா என்பதை விசுவாசிப்பது அவர்களுக்கு சாத்தியமற்ற ஒன்றாக தோன்றியிருக்கும், அவருடைய சிலுவை மரணம் கல்லறையின் அடக்கத்தை பார்த்து மிரண்டு இருப்பார்கள்.

இரண்டாவதாக, இந்த உலகத்தின் முடிவிற்கு முன்பாக நடக்கும் மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றி யூதர்களின் நம்பிக்கை மரித்த பிறகு இறுதியாக மகிமையும் அழியாமையும் உள்ள சரீரத்தை அடைவது என்று நினைத்திருப்பார்கள். இயேசுவின் உபத்திரவங்களை பார்த்து அவருடைய மரணம், அடக்கம் எல்லாவற்றையும் பார்த்து, சீஷர்களில் பெரும்பாலானோர் தங்கள் போதகருடைய கல்லறை ஒரு நினைவிடமாக மாறிடும் என்று நினைத்திருக்கலாம், அங்கு அவர்கள் பொதுவாக உலகத்தின் முடிவில் நடக்க இருக்கும் உயிர்த்தெழுதலுக்காக காத்திருக்க நினைத்திருப்பார்கள் அப்போது அவர் நம்மை தேவ ராஜ்யத்தில் சேர்ந்திடுவார். ஆனா அவர் ஏற்க்கனவே மரணத்தில் இருந்து உயிர்த்துவிட்டார் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை, ஏன்னா அது யூதர்களின் பார்வையில் சிந்தனைக்கு எட்டாத ஒரு காரியமாக இருந்தது.

இருந்தாலும் எல்லாவிதமான எதிர்மறையான எண்ணங்கள் கருத்துகள் மத்தியில் இயேசுவை தேவன் மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தார் என்பதை ஆதிகால சீஷர்கள் விசுவாசித்து ஏற்றுகொண்டார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. என்னை பொறுத்தவரை சீஷர்களுடைய வாழ்வில் உண்டான அசாதாரணமான மாற்றத்திற்கு இதுதான் சிறந்த விளக்கமாக இருக்க முடியும் என்று சொல்லிடுவேன்: தேவன் இயேசுவை மரணத்தில் இருந்து உயிர்ப்பித்தார். அது இயேசு தான் மேசியா என்பதை எளிதாக நம்பும்படி செய்தது. அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டார்கள் அது நம்முடையs உயிர்த்தெழுதலுக்கு அடையாளமாக இருந்தது, இது உலகத்தின் முடிவில் சம்பவிக்கும்.

சரி இப்ப நான்கு உண்மைகள் இருக்கிறதென்று பார்த்தோம், இவை அனைத்தும் இன்றைய வரலாற்று சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஒரே ஒரு கேள்விதான் பாக்கி, இவை அனைத்தையும் சிறப்பாக விளக்குவது எப்படி? சரி, வரலாற்று ரீதியாக பார்த்தால், நாத்திக மேதைகள் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கிறார்கள், சீஷர்கள் சரீரத்தை திருடி சென்றனர்., இயேசு மரிக்கவே இல்லை என்பது போல. இவை அனைத்தும் உலகளவில் வல்லுநர்கள் மேதைகளால் நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள். உண்மை என்னவென்றால் இந்த கூறுகளை இயற்கையின் தரம் மாறாமல் எடுத்து சொல்வதென்பது சற்று கடினம் தான். ஆகவே கிறிஸ்தவர்கள்

தேவன் இயேசுவை உயிரோடு எழும்பபன்னினார் என்பதை தாராளமாக நம்பும் உரிமையை பெறுகிறார்கள்  மேலும் இயேசு தம்மை குறித்த சொன்னவாரே இருக்கிறார் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் கிடையாது.

இயேசு சிலுவையில் அறியப்பட்டதற்கு காரணம் அவர் தம்மை மேசியா என்றதினால் தேவ தூஷணம் சொன்னார், தேவனுடைய குமாரன் என்றார், மனுஷ குமாரன் என்றார் என்றனர். இந்த மனிதர் தேவனால் மரணத்தில் இருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்றால்,  அவர் எந்த தூஷனத்திர்காக சிலுவையில் அறியபட்டாரோ அது வெளிப்படையாக தேவனால் உண்மை என்று அங்கீகரிக்கப்படுவது உறுதியாகி விட்டது, எனவே இயேசு யார் என்பதை எடுத்துறைக்கு காரியமாக இயேசுவின் உயிர்த்தெழுதல் தேவனுடைய தெய்வீகமான செயல் என்று வெளிப்பட்டது.

**ஆன்கர்பெர்க்:** சரி, நேயர்களே, இந்த அருமையான தகவல்களை கேட்டிருக்கிறீர்கள். மேலும், அறிவுப்பூர்வமாக, நீங்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்று சொன்னது உண்மை என்று கூறிடலாம், மேசியா என்றது உண்மை, மனுஷ குமாரன் என்று சொன்னதும் உண்மை, அதற்கு ஆதாரம் அவருடைய உயிர்த்தெழுதல், அது உண்மையாகவே நடந்திருக்கிறது, அப்படினா அந்த இயேசுவை கொண்டு நீங்க என்ன செய்ய போகிறீர்கள்? உங்கள் பாவங்களுக்கு

இயேசு பரிகாரம் செலுத்தினார். அவர் மேல் உங்கள் விசுவாசத்தை வைப்பீர்களானால், அவரிடம் திரும்பினால், உங்கள் வாழ்வை அவர் மாற்றிடுவார், உங்கள் வாழ்வில் அவர் பிரவேசித்திடுவார், உங்களை இரட்சிப்பார். இந்த நிகழ்சிகளில் நீங்க கேட்ட அனைத்தையும் தியானித்து பார்க்கும்படி உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன் தேவனிடம் திரும்பி சொல்லுங்கள் அவரை உங்கள் தேவனாக இரட்சகராக இருக்கும்படி அழைத்திடுங்கள்.

Dr. கிரேக், நீங்க இங்க வந்து இந்த நிகழ்ச்சியை கொடுத்ததற்கு உங்களுக்கு மனமார்ந்த நன்றிகளை கூறுகிறேன். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது, இந்த தகவல்கள் அனைத்தையும் நேயர்களாகிய நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் தொடர்ந்து எங்களோடு இணைந்திருங்கள் அதற்கான வழிகளை தெரியப்படுத்திடுவோம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

@2015 A.T.R.I.